FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348047

1. District : Dharmapuri PS: V & AC Year: 2026 FIR No.: 01/AC/2026 Date: 06.01.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2016 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 18.12.2025 at 10.30 PM Date to : 19.12.25 at 04.07 PM
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் 26.12.25 நாள் வரை & 27.12.25 at 11.00 AM
Time Period : Time from : at 0807 PM Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 06.01.2026 Time : 08.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 151 3063388 Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer typed (written) complaint
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Agriculture land of the informant, Near Nisha Bakery, Kambainallur and over phone.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. E. [illegible] (b) Father's/ Husband's Name : Tr. [illegible]
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 41 (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Coolie (g) Address : Sriramapuram village, Kongarapatti Post, Karimangalam Tk, Dharmapuri Dt.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Sounder Raj, Firka Surveyor, Kongarapatti, Karimangalam Taluk, Dharmapuri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் எதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

தமார்

06/01/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

06.01.2026 at 10.20 hrs

Name: பெயர் G. PERUMAL
Rank: நிலை Inspector of Police, No. எண்.....
VAL,
Dharmapuri

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.01/AC/2026, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12–ன் தொடர்ச்சி.

*****

இன்று 06.01.2026-ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை 08.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது, தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், கொங்கரப்பட்டி அஞ்சல், ஸ்ரீராமாபுரம் கிராமத்தில் வசிக்கும் எல்லப்பன் மகன் திரு.E.குமார் என்பவர் அலுவலகம் வந்து கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டிருந்து கொடுத்த எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு.

நான் தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், கொங்கரப்பட்டி அஞ்சல், ஸ்ரீராமாபுரம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். மேலும், எனக்கு எழுத படிக்க தெரியாது. தமிழில் கையொப்பம் மட்டும் போடுவேன். எனது தாயார் பெரியக்காள் பெயரில் வகுரப்பம்பட்டி கிராம சர்வே எண். 358/4–ல் 86.5 சென்ட் விவசாய நிலம் இருந்தது. எனது தாயார் பெரியக்காள் அவர்கள் 09.05.2005 தேதி இறந்துவிட்டார். அவருக்கு, எனது பாட்டி கௌரம்மாள், நான், எனது சகோதரர் காவேரி மற்றும் எனது அக்கா கனகம் ஆகியோர் வாரிசுதாரர்கள் ஆவோம். அதனடிப்படையில், மேற்படி நிலம் எங்கள் நால்வர்களின் பெயரிலும் பட்டா மாற்றம் செய்யப்பட்டது. அதன்பிறகு, எனது பாட்டி கௌரம்மாள் அவர்களும் 08.06.2025 தேதி இறந்துவிட்டார். பிறகு நான், எனது அண்ணன் மற்றும் எனது அக்கா ஆகியோர் மேற்படி எங்களது குடும்ப சொத்தை பாகப்பிரிவினை செய்துக்கொள்ள முடிவு செய்தோம். எனது அக்காவிற்கு குடும்ப சொத்து பெற விருப்பம் இல்லாததால் அவருக்கு எங்களது குடும்ப நிதியில் இருந்து ரூ.10,000/– கொடுத்துவிட்டு நானும், என் அண்ணன் காவேரியும் 24.11.2025 தேதி அன்று ஆள் ஒன்றுக்கு 43¼ சென்ட் நிலத்தை மொரப்பூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2183/2025–ன் படி பாகப்பிரிவினை பத்திரம் செய்துக்கொண்டோம். அதன்பிறகு, 18.12.2025 தேதி மதியம் ஒருவர் 9363077483 என்ற செல்போன் நெம்பரில் இருந்து எனது செல் நெம்பர் 8098201141–க்கு போன் செய்து, அவர் எங்கள் ஊர் சர்வேயர் சௌந்தர்ராஜ் என்றும், நானும், என் அண்ணன் காவேரியும் பாகப்பிரிவினை பத்திரம் செய்துள்ளதின்பேரில் எங்களது பெயரில் தனிபட்டா வழங்க மனு வந்துள்ளதாகவும், ஆகவே எங்களது நிலத்திற்கு இன்று சர்வே செய்ய வருகிறேன் என்றும் சொல்லி போனை வைத்துவிட்டார். அதன்பிறகு, நான் அவருக்கு இரண்டு முறை போன் செய்து எப்போது வருவீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் சாயங்காலம் 03.00 மணிக்கு மேல் வருவேன் என்று கூறினார். அதன்படி, சர்வேயர் சௌந்தர்ராஜ் அவர்கள் அன்று சாயங்காலம் சுமார் 03.30 மணிக்கு எங்களது நிலத்திற்கு வந்து, நிலத்தை பார்வையிட்டார். அப்போது நானும், எனது அண்ணன் காவேரியும் இருந்தோம். நிலத்தை பார்வையிட்ட பிறகு, சர்வேயர் சௌந்தர்ராஜ் அவர்கள் என்னிடம்,

உங்களது நிலத்தை அளந்து தனிபட்டா வழங்க பரிந்துரை செய்வதற்கு எனக்கு பணம் ரூ.15,000/– தர வேண்டும் என்று கேட்டு, தற்போது வைத்துள்ள பணத்தை கொடுங்கள் என்று கூறி என்னிடமிருந்து பணம் ரூ.700/–ஐ பெற்றுக்கொண்டு மீதி பணத்தை நாளை ரெடி பண்ணி கொடுத்தால் உடனடியாக நிலத்தை அளந்து உங்களுக்கு தனிபட்டா வழங்க பரிந்துரை செய்கிறேன் என்று சொல்லிவிட்டு கிளம்பிவிட்டார். அதன்பிறகு, 19.12.2025–ம் தேதி சுமார் 9 மணிக்கு சர்வேயர் சௌந்தர்ராஜ் எனக்கு போன் செய்து எங்கு இருக்கிறாய் என்று கேட்டார். நான் கூலி வேலை செய்துகொண்டிருக்கிறேன் அப்புறம் பேசுகிறேன் சார் என்று சொன்னேன். பிறகு, அன்று மீண்டும் சுமார் 09.45 மணிக்கு சர்வேயர் சௌந்தர்ராஜ் எனக்கு போன் செய்து வேலை முடிந்துவிட்டதா உன்னை பார்க்க வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான், சாயங்காலம் வரை வேலை உள்ளது என்று சொன்னேன். அதற்கு அவர், சரி சாயங்காலம் எனக்கு போன் பண்ணு என்று சொல்லி போனை வைத்துவிட்டார். அதன்பிறகு, அன்று மதியம் 02.24, 02.26 மற்றும் 02.27 ஆகிய நேரங்களில் மீண்டும் சர்வேயர் சௌந்தர்ராஜ் எனக்கு போன் செய்தார். நான் போனை பார்க்காததால் போனை எடுக்கவில்லை. அதன்பிறகு, அன்று மாலை சுமார் 04.07 மணிக்கு சர்வேயர் சௌந்தர்ராஜ் எனக்கு போன் செய்து தான் கேட்ட மீதி பணம் ரூ.14,300/–ரெடியாகிவிட்டதா என்று கேட்டார். அதற்கு நான், ஒரு வாரத்திற்குள் ரெடி பண்ணி தருகிறேன் என்று சொன்னேன். அதன்பிறகு, 26.12.2025–ம் தேதி இரவு சுமார் 08.07 மணிக்கு சர்வேயர் சௌந்தர்ராஜ் எனக்கு போன் செய்து பணம் ரெடியாகிவிட்டதா என்று மீண்டும் கேட்டார். அதற்கு நான் பணம் ரெடியாகவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் என்னிடம், நாளை நிலத்தை அளக்க வருகிறேன். கண்டிப்பாக மீதி பணத்தை கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அதன்படி, 27.12.2025–ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு சர்வேயர் சௌந்தர்ராஜ் அவர்கள் எனக்கு போன் செய்து எங்களது நிலத்திற்கு வந்தார். அங்கு நானும், எனது அண்ணன் காவேரியும் இருந்தோம். அப்போது சர்வேயர் சௌந்தர்ராஜ் அவர்கள் தான் ஏற்கனவே கேட்ட மீதி பணம் கொடுக்குமாறு என்னிடம் கேட்டார். அதற்கு நான், அவ்வளவு பணம் இப்போது இல்லை என்று சொன்னேன். அப்போது சர்வேயர் சௌந்தர்ராஜ் எங்களை கம்பைநல்லூர்–இருமத்தூர்–திப்பம்பட்டி கூட்டுரோடுக்கு பணத்துடன் உடனே வருமாறு சொல்லிவிட்டு சென்றுவிட்டார். அதன்படி, அன்று காலை 11.00 மணிக்கு எனது அண்ணன், எனது அண்ணன் மருமகன் குமார் மற்றும் அவரது நண்பர் கார்த்திக் ஆகியோர் கம்பைநல்லூர்–இருமத்தூர்–திப்பம்பட்டி கூட்டுரோடுக்கு சென்று அங்கு நிஷி கிருஷ்ணா பேக்கரிக்கு எதிரே நின்று கொண்டிருந்த சர்வேயர் சௌந்தர்ராஜ் அவர்களை சந்தித்து என்னிடம் இருந்த பணம் ரூ.1000/–த்தை அவரிடம் கொடுத்தேன். அதனை வாங்கி கொண்ட சர்வேயர் சௌந்தர்ராஜ் அவர்கள் அந்த பணம் ரூ.1000/– அப்ளிகேஷன் போடுவதற்கு என்றும், மீதி ரூ.13,000/–த்தை அவருக்கு கொடுத்துவிடுமாறும் அவரே

எனக்கு போன் செய்வதாகவும் சொல்லிவிட்டு கிளம்பிவிட்டார். அதன்பிறகு, 02.01.2026 மற்றும் 03.01.2026 ஆகிய தேதிகளில் சர்வேயர் சௌந்தர்ராஜ் அவர்கள் எனக்கு போன்செய்து உன்னை பார்க்க வேண்டும் எங்கு இருக்கிறாய் என்று கேட்டார். நான் வெளியில் இருப்பதாக சொல்லிவிட்டேன். பிறகு நேற்று 05.01.2026– தேதி சர்வேயர் சௌந்தர்ராஜ் அவர்கள் எனக்கு நான்கு முறை போன் செய்து உனது வீட்டிற்கு வரட்டுமா என்றும், எங்கு இருக்கிறாய் என்றும் கேட்டார். நான் வெளியில் இருப்பதாக சொன்னேன். அதற்கு அவர் என்னிடம், உனது நடவடிக்கை சரியில்லை, உங்களது மனுவை கேன்சல் செய்துவிடுவேன் என்று கோபமாக பேசி இன்றைக்குள் பணம் கொடுக்கவில்லை என்றால் உங்களுக்கு தனி பட்டா கிடைக்க வாய்ப்பே இல்லை என்றும், பணத்தை ரெடி பண்ணிவிட்டு அவருக்கு போன் செய்யுமாறும் சொல்லி போனை வைத்துவிட்டார். எனக்கு சர்வேயர் சௌந்தர்ராஜ் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.13,000/–த்தை கொடுத்து தனிபட்டா வாங்க விருப்பமில்லை. எனவே இன்று 06.01.2026 தேதி அவர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.13,000/–த்துடன் சென்று அவரை சந்திக்க தயாராக உள்ளேன். எனவே அவர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் குமார், நாள்.06.01.2026. Madam, Received the computer typed written complaint on 06.01.2026 at 08.00 hrs. Further, a confidential verification on the general reputation of the accused and whether the informant has motive with him personally was verified and found that the reputation of accused is learnt to be not good and nothing adverse against the informant and the information given in his computer typed written complaint is genuine. Therefore, a case in Dharmapuri V&AC, Cr.No.01/AC/2026, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered today 06.01.2026 at 08.30 hrs against Tr.Soundar Raj, Firka Surveyor, Kongarapatti, Karimangalam Taluk, Dharmapuri District. The original FIR and the computer typed written complaint of the informant have been sent to the Hon'ble Court of the Principal District and Sessions Judge, Dharmapuri and remaining copies are sent to the officers concerned.

06/01/2026

(G.PERUMAL)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dharmapuri.